මගේ අංකය / எனது இல / My No: DSD/HO/05/MF/01/சுற்றுநிருபம்
ඔබේ අංකය / உமது இல / Your No: ..........
දිනය / திகதி / Date: 2020.03.02

சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கிச் சுற்றுநிருப இலக்கம் - 2020/02

சகல சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கி/
வங்கிச்சங்க முகாமையாளர்களுக்கும்

**<u>2020 மார்ச் 08 ஆம் திகதிய சர்வதேச மகளீர் தினத்துடன் இணைந்து திரியமாதா சேமிப்பு மேம்பாட்டு வேலைத்திட்டத்தினை செயற்படுத்தல் - 2020</u>**

**01. அறிமுகம்.**

2020 மார்ச் 08 ஆம் திகதிய சர்வதேச மகளீர் தினத்தை முன்னிட்டு சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கிகளினூடாக திரியமாதா சேமிப்பு மேம்பாட்டு வேலைத்திட்டத்தினை செயற்படுத்தல்.

தைரியத் தாயின் / இல்லத்தரசிகள் மனை அலகின் நிர்வாகத்தினூடாக சமூகத்திற்கு சிக்கனம் தொடர்பான முன்மாதிரியினை கற்றுக்கொடுத்துள்ளனர். அதனை மேலும் வலுவாக்கி பணம் சேமிக்கும் பழக்கத்தினை பலப்படுத்தி முன்னெடுத்துச் செல்லவும் அவர்களின் பொருளாதார நிலைமையினை ஸ்திரப்படுத்தவும் அதன் நன்மைகளை நாட்டின் அபிவிருத்திக்கு ஈடுபடுத்தவும் இவ்வேலைத்திட்டத்தின் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது.

இக் குறிக்கோளை அடைந்து கொள்ளும் பொருட்டு தற்போது சமுர்த்தி வங்கிகளில் இணைந்துள்ள பெண்களும் இதுவரை இணைந்து கொள்ளாத பெண்களும் திரியமாதா சேமிப்புக் கணக்கிற்கு பணத்தை சேமித்துக் கொள்வதற்கும், புதிய திரியமாதா கணக்கினை ஆரம்பித்துச் செயற்படுத்துவதற்கும் இச் சேமிப்பு மேம்பாட்டு வேலைத்திட்டத்தின் மூலம் சந்தர்ப்பம் வழங்கப்படுகின்றது.

**02.** சர்வதேச மகளீர் தினத்தை முன்னிட்டு திரியமாதா சேமிப்பு மேம்பாட்டு வேலைத்திட்டத்தின் கீழ் திரியமாதா கணக்குரிமையாளர் உட்பட வங்கி பிரிவு பிரதேசத்திலுள்ள மகளீர்க்கு சேமிப்பு தொடர்பான அறிவுறுத்தல் வழங்கும் பொருட்டு, சமுர்த்தி சமுதாய அடிப்டை வங்கி/ வங்கிச் சங்க முகாமைத்துவக் குழுவின் ஆலோசனைக்கமைய இவ்வருடத்தில் வங்கிப் பிரிவுக்கு/ கிராம சேவையாளர் பிரிவுக்கு எவ்வித இலக்குகளும் வழங்கப்படவில்லை என்பதை அறியத்தருகின்றேன்.

**03. மேம்பாட்டு வேலைத்திட்டத்தின் கால எல்லை**

**3.1** 2020 மார்ச் 08 ஆம் திகதியிலிருந்து 14 ஆம் திகதி வரையான காலப்பகுதியினுள் சேமிப்பு மேம்பாட்டு வேலைத்திட்டத்தினை செயற்படுத்தல்.

**3.2** இவ் விடயத்தில் சமுர்த்திப் பயனாளி உட்பட குறைந்த வருமானம் பெறுவோரை கட்டாயப்படுத்தாமலும் இடையூறு விளைவிக்காமலும் சேமிப்பினை மேற்கொள்ளல் வேண்டும்.

**04.** சேமிப்பு மேம்பாட்டுக் காலங்களில் திரியமாதா கணக்குகளுக்கு பணம் வைப்பிலிடும் கணக்குரிமையாளருக்கு சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கியின் சுற்றறிக்கை இல.2019/01இன் பந்தி இல 4.3க்கு அமைய பரிசு வழங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

**05.** இவ் வேலைத்திட்டத்தின் முன்னேற்ற அறிக்கையை 2020.04.01ம் திகதிக்கு முன்னர் மாவட்ட சமுர்த்தி வங்கிப் பிரிவினூடாக, குறுநிதிப் பிரிவுக்கு bank@samurdhi.gov.lk என்ற மின்னஞ்சல் மூலம் அனுப்பி வைக்கவும்.

**06.** இவை தவிர்ந்த ஏனைய விடயங்களின் பொருட்டு 2019/01ம் இலக்க சுற்றுநிருபம் நடைமுறையில் இருக்கும்.

R.P.B.திலகசிறி
பணிப்பாளர் நாயகம்

பிரதிகள்:

1. செயலாளர், மகளீர் சிறுவர் நடவடிக்கைகள் மற்றும் சமூக பாதுகாப்பு அமைச்சு - தகவலுக்காக
2. செயலாளர், சமூக பாதுகாப்பு இராஜாங்க அமைச்சு - தகவலுக்காக
3. சகல மாவட்ட செயலாளர்களுக்கும்/ மேலதிக பணிப்பாளர் நாயகம், மாவட்ட செயலகம். - தகவலுக்காக
4. மேலதிக பணிப்பாளர் நாயகம், சமு. அபி. திணைக்களம் - தகவலுக்காக
5. சகல மாவட்ட சமுர்த்திப் பணிப்பாளர்களுக்கும் - தகவலுக்காகவும் உ.ந.பொ
6. பிரதான உள்ளகக் கணக்காய்வாளர், சமு. அபி. திணைக்களம் - தகவலுக்காக
7. பிரதம கணக்காளர், சமு. அபி. திணைக்களம் - தகவலுக்காக
8. சகல பணிப்பாளர்களுக்கும், சமு. அபி. திணைக்களம் - தகவலுக்காக
9. சகல பிரதேச செயலாளர்களுக்கும், பிரதேச செயலகம் - தகவலுக்காக
10. சகல நிறைவேற்றுச் சபைத் தலைவர்களுக்கும், சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கிச் சங்கம் - தகவலுக்காகவும் உ.ந.பொ
11. சகல கட்டுப்பாட்டுப்பாட்டுச் சபைத் தலைவர்களுக்கும், சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கி - தகவலுக்காகவும் உ.ந.பொ